மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 67, திரு. கோவை தங்கம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

67—

மீன் எண்ணெய்த் தொழிற்சாலை

***54687—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் ஆழியார் அணை, சோலையார் அணை, நீரார் அணை, பரம்பிக்குளம் போன்ற மிகப் பெரிய அணைகள் இருப்பதால், வால்பாறை தொகுதியில் மீன் எண்ணெய் தயாரிக்கின்ற மீன் சார்ந்த தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் மீன் எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் எந்தவிதமான தொழிற்சாலைகளும் இல்லை. சுமார் ஒரு இலட்சம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். 90 சதவீதம் பேர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். இருப்பது ஒரே ஒரு தொழில், தேயிலை பறிக்கின்ற தொழில். அந்த தேயிலைத் தோட்டத் தொழிலும் இப்போது பாதித்திருக்கிறது. ஏற்கெனவே பெற்றுவந்த சம்பளமும் ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய் பிடித்துக்கொண்டிருக்கிறது நிர்வாகம். படித்துவிட்டு வேலையில்லாத பல்லாயிரக்கணக்கான தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ன செய்வது, நம் எதிர்காலம் என்ன என்பது கேள்விக்குறியாகி இளைஞர்கள் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே வால்பாறையிலுள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் குடும்பங்களும் விவசாயக் குடும்பங்களும் வறுமையில் இன்று வாடிக்கொண்டிருக்கின்றன. ஆகையால் வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் சோலையாறு அணை, நீரார் அணை, ஆழியாறு அணை, பரம்பிக்குளம் அணை போன்ற

2005 செப்டம்பர் 27]

அணைகள் இருப்பதால் இங்கு மிகவும் அதிகமாக மீன் உற்பத்தியாகிக்கொண்டிருக்கிறது. மேலும் மீன் உற்பத்தியை அதிகமாகவும் ஏற்படுத்தலாம். ஆகவே மீன் எண்ணெய் தயாரிக்கின்ற, மீன் சார்ந்த தொழிற்சாலையை ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா, அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–லே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்கள் தொகுதியிலோ மற்ற பகுதிகளிலிருந்து யாராவது தனியாரை வரவழைத்து தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், அரசு அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தாழ்த்தப்பட்ட தொகுதி என்று ஏற்கெனவே சொன்னேன். மிகவும் வறுமையில் இருக்கின்ற பகுதி. அங்கு தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு எந்த முதலாளிகளும் முன்வருவதில்லை. எந்த நிர்வாகமும் முன்வருவதில்லை என்பதைத் தெரிவித்து, வால்பாறை மக்கள் முன்னேற எந்தவிதமான தொழிற்சாலைகளும், கல்லூரிகளும் இல்லை, வால்பாறையிலே ஒரு ஆலை, மில் எதுவுமே இல்லை. அப்படிப்பட்ட பகுதிதான் வால்பாறை மலைப்பகுதி. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் ஒரு நாளைக்குக் கிடைக்கக்கூடிய 72 ரூபாயில் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீன் எண்ணெயைப்பற்றிக் கேளுங்கள்.

திரு. கோவை தங்கம்: ஆகவே, எந்தத் தொழிலும் செய்யமுடியாத அந்தப் பகுதியில் மீன் எண்ணெய் தயாரிக்கின்ற தொழிற்சாலையை ஏற்படுத்தினால் விவசாய மக்களும் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களும் பயனடைவார்கள். அதற்காக வால்பாறை கீழ்ப் பகுதியில் இருக்கின்ற மக்களும் மகிழ்ச்சியடைவார்கள், விவசாயக் கூலிகளும் மகிழ்ச்சியடைவார்கள். ஆகவே மீண்டும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்வது, 100 வருடங்களாக எந்த முன்னேற்றமும் இல்லாத வால்பாறை மலைப்

பகுதியை முன்னேற்றுவதற்கு அங்கே மீன் எண்ணெய் தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தினால் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். மீண்டும் அவர்களுடைய குடும்பத்திற்கு எதிர்காலத்தில் அவர்களுக்கு ஒரு வாழ்வு கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக மீண்டும் வலியுறுத்தி அமைகின்றேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணெய்ச் சத்து அதிகமாக உள்ள சுறா மீன், சால மீன் போன்ற மீன்கள் உள்நாட்டு நீர்நிலைகளில் வளர்க்க இயலாது. கடற்பகுதியிலேதான் அதுபோன்ற மீன்கள் எல்லாம் வளரும். எனவே மீன் எண்ணெய் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 68, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

68—

மீனவர் பயிற்சிப் பள்ளி

***60119—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பழையார் மீன்பிடித் துறைமுகம் மற்றும் சீர்காழி தொகுதி ஆகிய இடங்களில் மீனவர் பயிற்சிப் பள்ளி தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பழையார் மீன்பிடித் துறைமுகம் மற்றும் சீர்காழி தொகுதியில் மீனவர் பயிற்சி நிலையம் தொடங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.